**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 19/2025</u>**

**2026 –ம் வருடம் ஜுன் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. கிருத்திகா என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. காரி, த/பெ. மடியன் வயது. 65 ஊர். கன்னேரிமுக்கு, கோத்தகிரி**

**------------------------------------------------------------------------**

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>PW1 குறுக்கு விசாரணை 12.11 P.M.</u>**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்று தெரியுமா என்றால் 520 ஆகும். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணம் யார் பெயரில் உள்ளது என்று சொன்னால் ரவிச்சந்திரன், ஐய்யாசாமி ஆகியோர்கள் பெயரில் உள்ளது. மேற்படி நபர்களுக்கு யார் எழுதிக் கொடுத்தது என்றால் மணி என்பவர் பூர்வீக சொத்தை, ரவிச்சந்திரன், ஐய்யாசாமிக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி விபத்தை நான் வழக்கில் கூறியுள்ளேன். மேற்படி ரவிச்சந்திரன், ஐய்யாசாமியை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ரவிச்சந்திரன், ஐய்யாசாமி, எனக்கு கொடுத்தார்கள் என்பதை நிரூபிக்க ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் 1 சென்டிற்கு ரூ.25000/– என்று 20 வருடத்திற்கு முன்பு கொடுத்து வாங்கினேன், ஆனால்

பதிவு செய்யவில்லை, அசல் ஆவணங்களை என்னிடம் கொடுத்துவிட்டார். நான் ரவிச்சந்திரன், ஐய்யாசாமிக்கு பணம் கொடுத்தற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, நான் பணத்தை கொடுத்தவுடன் அசல் ஆவணத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்கள்.

2. இது சம்பந்தமாக எந்தவித புகாரும் நான் கொடுக்கவில்லை, ஆனால் ஊரில் பஞ்சாயத்துக்கு சென்றிருந்தேன், பணம் கொடுத்தது சம்பந்தமாகவோ, ஆவணங்கள் சம்பந்தமாகவோ பஞ்சாயத்து வைப்பதில்லை என்றும் நீதிமன்றத்தில் பார்க்கும்படி சொல்லிவிட்டார்கள். மேற்படி விபரத்தை நான் வழக்கில் கூறவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் நான் அனுப்பியதாக சொல்லப்படும் அறிவிப்பை, பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் மறுத்துவிட்டார் என்று வழக்கில் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். நான் இரண்டு அறிவிப்புகள் பிரதிவாதிக்கு அனுப்பினேன். அந்த இரு அறிவிப்பும் என்ன என்ன தேதி என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் கடைசியாக 13ம் தேதி 2025ம் வருடம் அனுப்பினேன். அந்த அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

பிரதிவாதியின் தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the Plaintiff / Plaintiff's Counsel and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 24.06.2026**
**District Munsif,**
**Kotagiri.**